5. அறிவிப்புகள்

(அ) சட்டமன்றப் பத்திரிகையாளர்களுக்குப் பேனா, சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மாட அனுமதிச் சீட்டு வழங்கப்பெற்றுள்ள செய்தியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுவதுபோன்று இந்த ஆண்டும் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமுன்வடிவு பிரிவு–2–லிருந்து இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–35

4. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை

(ஆ) கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

குடும்ப வருவாய் சரியாக இருந்தால் குடும்பமும் சிறப்பாக நடக்கும். அதுபோல, வருவாய்த் துறை என்பது சரியாக இருந்தால் தேசத்தின் வழி சரியானதாக இருக்கும், வழியும் திறக்கும். மனித